**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**EP. No. 22/2018**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
| NAME | ராஜன் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 09.01.2026.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. இந்த மனுவை எதிர்மனுதாரர்கள் 4, 5, 7 மற்றும் 8 ஆகியோர்களை நீதிமன்ற அவமதிப்பு செய்ததாக சிவில் சிறைக்கு அனுப்ப வேண்டும் என மனு போட்டுள்ளேன் என்றால் சரிதான். 4ஆம் எதிர்மனுதாரர் பெயர் முனியம்மாள் என்றால் சரிதான். 5வது எதிர்மனுதாரர் பெயர் முத்துலட்சுமி என்றால் சரிதான். 7வது எதிர்மனுதாரர் அருணா என்றால் சரிதான், 8வது எதிர்மனுதாரர் கஸ்தூரி என்றால் சரிதான்.

2. எதிர்மனுதாரர்கள் 4, 5, 7 மற்றும் 8 ஆகியோர் பெண்கள் என்பதால் அவர்களை சிவில் சிறைக்கு அனுப்ப மனு போட்டது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. இதே சொத்து தொடர்பாக எனக்கும் எதிர்மனுதாரர்கள் மற்றும் வேறு தரப்பினர்களுக்கு இடையே பாகப்பிரிவினை கோரி வழக்கு இதே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.36/2015 இதே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றாலும் அதில் நாங்கள் 7 மற்றும் 8வது பிரதிவாதிகளாக உள்ளோம் என்றால் சரியல்ல.

4. எதிர்மனுதாரர்கள் தகராறு செய்ததாக சொல்வது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அதன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் காவல்நிலையம் சென்றேன் போலிசார் நீதிமன்றத்தில் உத்தரவு வாங்கிவர சொன்னார்கள். புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகார் நகல் என்னிடம் உள்ளதா என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

5. நான் சொத்தை உழுவதற்காக சென்றபோது தகராறு நடந்ததா என்றால் ஆமாம் பயிரை அவர்கள் தான் வைத்திருந்தார்கள் நான் சென்றபோது தகராறு செய்தார்கள் நான் காவல்நிலையம் சென்றேன். நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் ஆள் இல்லாதபோது தகராறு செய்ததாக சொல்லிவிட்டு தற்போது மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் தான் ரொம்பகாலமாக சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல நானும் பயிர் செய்தேன். நான் சுவாதீனம் கேட்டு பரிகாரம் வாங்கியிருக்க வேண்டும் என்றாலும் அதனால் நான் பெற்ற தீர்ப்பு நிறைவேற்ற கூடியதல்ல என்றால் சரியல்ல.

6. நான் நிலுவையில் உள்ள வழக்கையே மறைத்து நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்திற்குஎதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் எப்போதும் நீதிமன்றம் உத்தரவை மீறவில்லை என்றாலும் சட்டத்திற்கு புறம்பாக சுவாதீனம் அடைய வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்தில் எதிர்மனுதாரர்கள் தவிர மற்ற பாகஸ்தாரர்களும் அனுபவிக்கிறார்கள் என்றாலும் அவர்களை வெளியேற்ற வேண்டி பொய்யாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த மனு தவறானது என்பதால் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.